**இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2019**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை கடற்றொழில் மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை. அபிப்பிராயாயத்தை மறுப்பதற்கான அடிப்படை பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளும் கணக்காய்வின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடிந்திருக்கவில்லை.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுனாமி அனர்த்தம் காரணமாக சேதமடைந்த சொத்துக்களை புனரமைப்பதற்காக 2004 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 945,559,937 தொகை அச்சொத்துக்களின் புனரமைத்த லிற்கான மூலதனப் பெறுவனவுகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட் டிருந்தது. இருப்பினும், அந்தச் சொத்துக்களின் காலத்தேய்மானத்தை மூலதனப் பெறுவனவுகளுடன் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுக்காது 15 ஆண்டுகளிற்கும் மேலாக ஒதுக்கங்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட் டுள்ளது. | 2007 இல் சொத்துக்கள் மீள விலைமதிக்கப்பட்டதுடன் அதன்போது சேதமடைந்த சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் மீள விலைமதிக்கப்பட்டன. பின்னர், அத்திகதியில் உள்ளவாறு பேரேட்டில் காணப்பட்ட சொத் துக்களுடன் மீள விலைமதிக் கப்பட்ட சொத்துக்கள் சீராக் கப்பட்டு மீள விலைமதித்தல் ஒதுக்கக் கணக்கு உருவாக்க ப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 2,686,972,668 ஆகும். ஆகையால், எதிர்காலத்தில் குறித்த சீராக்கங்கள் மீளாய்வு செய்யப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் காலத்தேய்மானத்தை மூலதனப் பெறுவனவு களுடன் சீராக்குவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தினால் செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த ஆதனங்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந் தது. இருப்பினும், அவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 87 ஆதனங்களுடன் தொடர்புடைய நியாயப் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், அவற்றின் முதலீட்டு ஆதனங்கள் தொடர்பான விபரங்களும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனங்களின் நியாயப் பெறுமதிகளை மதிப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகைக்கு வழங் கப்பட்டுள்ள ஆதன ங்களின் விலை மதிப்பீட்டைப் பெற்று, நியாயப் பெறுமதிகளை நிதி க்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புராணவெல்ல மீன்பிடி துறைமுகத்தின் உள்ளக வீதிக் கட்டமைப்பை புனரமைப்பதற்காக 2019 மார்ச் 07 ஆந் திகதி செலுத்தியிருந்த ரூபா 1,788,400 முற்பணத் தொகையை நடைபெற்றுவரும் வேலை எனக் கணக்கீடு செய்யாது பராமரிப்புச் செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் அத்தொகையால் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. | அந்த முற்பணத்துடன் தொடர் புடைய புனரமைத்தல் நடவடி க்கைகள் முடிவடைந்துள்ள தாக பொறியியலாளரால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது டன் அதன்மூலம் உள்ளக வீதிக் கட்டமைப்பின் ஒரு பகுதி பூரணப்படுத்தப்பட்டு ள்ளது. ஆகையால் அத் தொகை செலவினமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட் டுள்ளது. | உட்கட்டமைப்பு வசதி களை நிர்மாணித்த லின் நிமித்தம் செய்யப்படுகின்ற மூலதன செலவுகள், நடைபெற்று வரும் வேலைகளின் கீழ் இனங்காணப்படுதல் வேண்டும். |
| (ஆ) புராணவெல்ல மீன்பிடி துறைமுகத்தின் வலைகளை தயாரிக்கும் மண்டபத்தின் நிர்மாண வேலைகள் 2019 மே 16 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், ஒப்பந்த பெறுமதியான ரூபா 6,445,061 தொகையை சொத்தாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைபெற்று வரும் வேலைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 யூன் 26 அன்று செலுத்திய இறுதிக் கொடுப்ப னவுடன் அந்த வேலைகள் 2019 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், அந்த வலைகள் தயாரிக்கும் மண்டபம் 2020 சனவரி மாதத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2019 ஆம் ஆண்டின் சொத்துக் கணக்கிற்கு மாற்றுவதற்காக நாளேட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. | நிர்மாணங்களை பூரணப்படுத்தல் சான் றிதழின் படி மீளாய் வாண்டின் இறுதியில் நடைபெற்று வரும் வேலைகள் கணக்கி லிருந்து சொத்துக் கணக்கிற்கு மாற்றப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) சிலாபம் மற்றும் மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகங்களை பசுமை மீன்பிடித் துறைமுகங்களாக அபிவிருத்தி செய்வதற்கு ஒப்பந்தத்திற்கு முன்னரும் பின்னரும் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 4,906,175 ஆலோசனைச் சேவைக் கட்டணத்தை ஏனைய வருமானமாக கணக்கில் காட்டப்படுவதற்குப் பதிலாக அமைச் சின் மானியங்களாகக் காட்டப்பட்டு ள்ளது. இதன் விளைவாக, மீளாய்வா ண்டிற்கான நட்டம் நிதிக் கூற்றுக்களில் அதிகமாக காட்டப்பட்டுள்ளது. | இதனை திருத்துவதற்காக நாளேட்டு உறுதிச்சீட்டு இல. J/ 117 /2021 இன் கீழ் கணக்கீ ட்டுப் பதிவு செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கை யில் 2019 ஆம் ஆண்டிற்கான இலாப நட்டத்தில் சீராக்குவதற்கு நிதிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. | மீளாய்வாண்டிற்கான வருமானமாக கிடைத் துள்ள ஆலோசனைச் சேவைக் கட்டணத் தை ஏனைய வருமா னமாக காட்டுதல் வேண்டும். |
| (ஈ) காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் வியாபார மற்றும் ஏனைய பெறத்தக்க விடயங்களின் மாற்றமாக ரூபா 107,330,143 தொகை காட்டப்பட்டுள்ள போதிலும், நிதிக் கூற்றுக்களிலுள்ள தகவல்களின் படி அந்த மாற்றம் ரூபா 119,763,903 ஆகவும் பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா 10,110,436 ஆகவும் காணப்பட்டமையால் அத்தொகை ரூபா 9,636,797 ஆல் குறைத்து காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, காசுப் பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மை குறித்து கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை. | 2020 ஆம் ஆண்டின் கணக்கு களில் திருத்தப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றை சரியாகக் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்ப ட்டுள்ள மற்றும் தற்போது கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தி வரப்படுகின்ற 16 மீன்பிடி துறைமுக ங்களிற்குச் சொந்தமான காணிகளை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்று அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, பெரேலிய நங்கூரமிடல் தளத்தின் வேலைகள் ரூபா 282,705,399 கிரயத்திலும் மயிலடி மீன்பிடி துறைமுக வேலைகள் ரூபா 94,504,496 கிரயத்திலும் பூரணப்படுத்தப் பட்டு முறையே முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கூட்டுத்தாபனத் | பெரேலிய நங்கூரமிடல் தளத் தின் நிர்மாண வேலைகள் அமைச்சின் செயற்திட்டப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட துடன், அதனை கணக்கீடு செய்வதற்காக செயற்திட்ட அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன். 2021 ஆம் ஆண்டில் அதனை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மயிலடி மீன்பிடி துறைமுக வேலைகளும் அமைச்சின் செயற்திட்டப் பிரிவால் மேற் கொள்ளப்பட்டதுடன், கணக் கீடு செய்வதற்காக செயற் திட்ட அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன். 2021 | மூலதன மானியங்கள் மற்றும் சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் காட்டு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மூலதன மானியங்களையும் சொத்துக்களையும் நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டில் அதனை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) ஏனைய மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களிற்கான காலத்தேய்மானப் பெறுமதி ரூபா 19,092,251 ஆல் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப் பட்டிருந்தது. இதன்காரணமாக இந்தச் சொத்துக்களின் பெறுமதியும் ஏனைய மூலதன மானியங்களின் பெறுமதியும் மேற்படி தொகையால் நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறே, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 128.47 மில்லியன் மொத்தக் கிரயமுடைய இயந்திர உபகரணங்கள் கூட்டுத்தாபன த்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் காலத்தேய்மானம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதிகரித்துக் காட்டப்பட்டிரு ந்த காலத்தேய்மானத்தை 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>இந்த மீதிகள் பல ஆண்டுகளிற்கு முன்பிருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகள் ஆகையால் அந்த சொத்துக்களை காலத்தேய்மானம் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சரியாக காலத்தேய் மானத்தை சீராக்குவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மயிலடி மீன்பிடி துறைமுகத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவினத்திற்கும் அதற்குரிய பட்டோலையில் காட்டப்பட்டிருந்த செலவினத்திற்கும் இடையே ரூபா 11,518,334 வேறுபாடும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான படகுகளிற்கான வருடாந்த எரிபொருள் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறும திக்கும் அதற்குரிய பட்டோலையில் காட்டப்பட்டிருந்த பெறுமதிக்கும் இடையே ரூபா 4,766,571 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த எரிபொருள் இருப்பு பெறுமதிக்கும் பௌதீக இருப்பு பெறுமதிக்கும் இடையே ரூபா 7,957,638 பெறுமதியான 81,111 லீற்றர் வேறுபாடு அவதானிக் கப்பட்டது. இருப்பினும், இந்த வேறுபாடுகளிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பட்டோலையில் மயிலடி மீன்பிடி துறைமுகத்திற்குரிய மொத்த செலவினத்தில் கணக்குக் குறியீட்டு தவறொன்று இடம்பெற்றுள்ளதுடன் செயற்பாட்டு இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை.<br><br>எரிபொருள் மீதான பௌதீக பரிசோதனையின் போது எப்போதும் புத்தகப் பெறுமதியுடன் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. பௌதீக எரிபொருள் பரிசோதனை ‘‘டிப்’’ (Dip) கம்பியின் உதவியுடன் செய்யப்படுவது டன் அதன்போது சிறியளவான தொகைகள் வேறுபடுவதனால் இவ்வாறான சிறுசிறு வேறுபாடுகள் இடம்பெறுகின்றன. மேலும், காலை வேளையி லும் மாலை வேளையிலும் எரிபொருள் பரிசோதனை | நிதிக் கூற்றுக்களிலும் அதற்குரிய பட்டோலைகளிலும் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளிற்கான காரணங்களை கண்டறிந்து திருத்துதல் வேண்டும். |

செய்கையில் இவ்வாறு புத்தகப் பெறுமதியுடன் வேறு பாடுகள் காணப்படுகின்றன.

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துருவிலான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 6,554,375,576 மொத்தக் கிரயம் கொண்ட 23 நிலையான சொத்து வகைகளிற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு, ரூபா 108,700,043 தொகையான 02 வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்குரிய ஆதாரப்படுத்தல் ஆவணங் கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள், ரூபா 214,635,319 தொகையான அமைச்சின் மற்றும் ஏனைய மானியங்கள் மற்றும் ரூபா 838,173,660 தொகையான ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்த தொகை ஆகிய மூலதனப் பெறுகைகளிலிருந்து நிறைவேற்றிய கருமங்கள் மற்றும் மூதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள், 04 விடயங்களுடன் தொடர்புடைய ரூபா 116.8 மில்லியன் நடைமுறைச் சொத்துக்க ளிற்கான விபரமான பட்டோலைகள் மற்றும் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக காட்டப்பட்டுள்ள ரூபா 6,768,012 நாளேட்டுப் பதிவுகளிற்குரிய ஆதாரப் படுத்தல் ஆவணங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அந்த கணக்கு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடிந்திருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் இந்த கணக்கு விடயங்க ளிற்குரிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ளு மாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காட் டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத் துவதற்குத் தேவையான நிலையான சொத்துக் கள் பதிவேடு, கடன் பட்டோர் பட்டோலை, ஆதாரப்படுத்தல் ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல்கள் போன்ற எழுத்துமூலச் சான்றுகளை கணக்கா ய்விற்குச் சமர்ப்பிப்பத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கா ய்வுச் சட்டத்தின் viii ஆம் பகுதியின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்கு தகவல் களை சமர்ப்பிதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 396(இ) | 4 வங்கிக் கணக்குகள் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 6 மாதங்களிற்கு மேலாக இதுவரை கொடுப்பனவுக் காகச் சமர்ப்பிக்கப்படாதுள்ள ரூபா 3,159,737 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | 06 மாதங்களிற்கு மேலா க சமர்ப்பிக்கப்படாதுள்ள காசோலைகளில் இது வரை வாடிக்கையாளரு க்கு வழங்கப்படாது எம்மிடம் வைத்திருக்கப் பட்டுள்ள காசோலைகள் இரத்துச் செய்யப்பட்ட துடன், வாடிக்கையாளரு க்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை வங்கிக்கு கொடுப்பனவுக் காகச் சமர்ப்பிக்கப்படா துள்ள காலம்கடந்த காசோலைகளிற்கு கொடுப்பனவு செய்யப்ப டாதிருப்பதை உறுதிப்ப டுத்திய பின்னர் மேற்படி வங்கிக் கணக்குகள் சீராக்கப்பட்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்று க்கள் தயாரிக்கப்பட்டுள் ளன. | நிதிப் பிரமாணத் தின் படி நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சன நாயக சோசலி சக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாய த்தின் 13.3 ஆம் பந்தி | பதிற்கடமை நியமனமானது நிரந்தர நியமனம் வழங்கப் படும் வரை தற்காலிக தீர்வாகக் காணப்பட வேண் டிய போதிலும், 06 உத்தியோ கத்தர்கள் 2016 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பதிற் கடமை அடிப்படையில் நியமி க்கப்பட்டிருந்தனர். | ஒரு உத்தியோகத்தரின் நிரந்தரப் பதவி உதவிக் கணக்காளராவதுடன், 2018 நவம்பர் 01 ஆந் திகதி முதல் பதிற்கடமை கணக்காளர் பதவி வழங் கப்பட்டுள்ளது. புதிய துறைமுகங்கள் நிர்மா ணிக்கப்பட்டதைத் தொட ர்ந்து அங்கீகரித்த ஊழியர் கோப்பிற்கு உட்பட்டு வரையறுக்கப் பட்ட அளவில் புதிய ஆட்சேர்ப்புகள் மேற்கொ ள்ளப்பட வேண்டியிருப் பதனால் தற்போதைய சூழ்நிலையில் பிரதித் துறைமுக முகாமையா ளர் பதிவிகளிற்கு பதிற்கடமை நியமனங் கள் வழங்கப்பட்டுள்ளன. புதிய துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டதைத் | நிரந்தரப் பதவி களிற்கு நியமனங் களை செய்வதற்கு கூட்டுத்தாபனம் விரைந்து நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்ந்து துறைமுக முகாமையாளர்கள் காணப்படாமையால் அங்கீகரித்த ஊழியர் கோப்பிற்கு உட்பட்டு துறைமுக முகாமையாள ர்கள் ஆட்சேர்க்கப்படும் வரை இவ்வாறு பதிற் கடமை நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. தற்போது இந்த பதிற் கடமை நியமனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி முதல் கணக்காளர் பதவி க்கு நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | 01/2015 ஆம் இலக்க 2015 மே 25 ஆந் திகதிய அரச முயற்சி கள் சுற்றறிக் கையின் 01 ஆவது பிரிவு | போக்குவரத்து படியினை பெற்றுக் கொள்வதற்கு உரித் தற்ற MM 1-1 மற்றும் JM 1-1 வகுதியிலுள்ள 36 உத்தியோகத்தர்களிற்கு பணி ப்பாளர் சபையின் அங்கீகாரத தின் அடிப்படையில் ரூபா 3,133,500 கூட்டுத்தொகை யான போக்குவரத்துப் படி மீளாய்வாண்டில் செலுத்தப் பட்டிருந்தது. | துறைமுக முகாமையா ளர்கள் மற்றும் பிரதி துறைமுக முகாமையா ளர்களிற்கு உத்தியோக பூர்வ பிரயாணங்களி ற்காக படியினை செலுத் துவதற்கு பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீ காரம் பெறப்பட்டுள்ளது டன் துறைமுகங்களிலிரு ந்து ஏனைய நிறுவனங்க ளிற்கு சென்றுவருவதற்கு குறிப்பிடத்தக்க தூரம் காணப்படுவதனால் துறைமுகங்களில் காண ப்படுகின்ற போக்குவர த்து அசௌகரியங்களை கருத்திற்கொண்டு இந்த படி செலுத்தப்படுகின்றது. | சுற்றறிக்கையிலுள் ள அறிவுறுத்தல் களின் படி போக்கு வரத்துப் படி செலு த்துவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) 05/2017 ஆம் இலக்க மற்றும் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அரசாங்க கூட்டுத்தாபங்களி லுள்ள சிரேஷ்ட தரத்திலுள்ள உத்தியோகத்தர்களிற்கு தொழில்சார் படியினை செலுத் துகின்ற ஏற்பாடுகளிற்கு முரணாக கூட்டுத்தாபனத் தினால் சேவைக்காலத்தை கருத்திற்கொள்ளாது கூட்டுத் தாபனத்தின் 07 பொறியியலா ளர்களிற்கு மாதாந்தம் ரூபா 15,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 1,080,000 கூட்டுத் தொகை தொழில்சார் படி செலுத்தப்பட்டிருந்தது. | பொறியியலாளர் படிக்கு மேலதிகமாக கூட்டுத்தாப னத்தின் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோ கத்தர்களிற்கு வழங்கப் பட வேண்டிய தொழில் சார் படி சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த உத்தி யோகத்தர்களிற்கு வழங் கப்படுவதில்லை என்ப தால் அவர்களிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பொறியியலாளர் படி செலுத்தப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பா டுகளின் படி தொழி ல்சார் படியினை செலுத் துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (உ) பிஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சி கள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்தால் வரிசை அமைச்சுக்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கும் கூட்டுத்தாபனத்தின் 13 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,579,704 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப் பட்டிருந்தது. | அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) அவர்களின் கையொப்பத் துடன் 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி எழுத்துமூலம் இந்த ஊழியர்களை தற்காலிக அடிப்படையில் வரிசை அமைச்சுக்கு விடுவிக்குமாறு கோரப் பட்டதுடன், இந்த ஊழி யர்களிற்கான சம்பளம் மற்றும் படிகளை அமைச் சிடமிருந்து மீளப்பெறுவ தற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை அறிவு றுத்தல்களின் படி நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (ஊ) PED 03/2018 ஆம் இலக்க மற்றும் 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பொது முயற்சி கள் சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டில் நட்ட நிலைமை காணப்பட்டமை யால் கூட்டுத்தாபனத்தின் பதவியணியினருக்கு செலுத்த க்கூடிய அதிகூடிய உபகாரச் சம்பளம் ரூபா 3,000 ஆன போதிலும், பதவியணியிலு ள்ள அங்கத்தவர்களிற்கு ரூபா 15,000 வீதம் ரூபா 15,768,250 தொகையான உபகாரச்சம்பளம் அமைச் சரவையின் விசேட அனும தியும் பொதுத் திறைசேரி யின் ஒப்புதலும் பெறப்ப டாது 2018 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டில் இலாப | மணல் மற்றும் அகழ்வு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானத்தின் அடிப்படையில் பணிப்பா ளர் சபையின் அங்கீகார த்தின் மீது ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டுள்ளது.<br><br>திமிங்கிலங்களை பார் வையிடுதல் செயற்திட் டத்திலிருந்து கிடைத்த இலாபத்தின் அடிப்படை யில் பணிப்பாளர் சபை க்கு சமர்ப்பித்த விஞ்ஞா பனத்திற்கு அமைய | திறைசேரியின் முறையான அங்கீ காரத்தின் மீது மாத்திரமே பதவி யணியினருக்கு உபகாரச் சம்பள த்தை செலுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமை காணப்பட்டமையால் செலுத்தக்கூடிய அதிகூடிய உபகாரச்சம்பளம் ரூபா 15,000 ஆன போதிலும், சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக பதவியணி உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 25,000 வீதம் ரூபா 30,950,000 தொகையான உபகாரச்சம்பளம் 2019 ஏப்ரல் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>2019 யூன் 28 ஆந் திகதிய PED/A/CFHC/1/1 ஆம் இலக்க கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருந்த பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கடிதத்தின் படி மேற்படி கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் உபகாரச் சம்பளமாக செலுத்தப்பட்டுள்ள தொகையை திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகை கணக்காய்வுத் திகதியான 2020 செப்தெம்பர் மாதம் வரையிலும் பொதுத் திறைசேரிக்கு அனுப்பவைக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், அதனைச் செலுத்தப்பட்ட பின்னர் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதி எழுத்துமூலம் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2019 மே 31 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் எமக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு அமைய ஊழியர்களிற்கு ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டமை தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை நிறைவேற்ற முடியாதிருப்பதுடன் எதிர்வரும் காலத்தில் இவ்வாறான ஊக்குவிப்புப் படியினை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படின் அதற்காக ஊக்குவிப்புத் திட்டமொன்றைத் தயாரித்து திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை | | | |
| i) 1.2.1 | “நில் தியவர” படகுக்கு ரூபா 7,255,600 பெறுமதியில் Plastic Discharge Pipe with Plumbers இனை கொள்வனவு செய்வதற்காக நியாயமான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டு விலைமனுக்கோரல் இணையதளத்தில் வெளியிடப்பட்ட அன்றைய தினமே அதாவது 2019 ஒக்தோபர் 03 ஆந் திகதி கூறுவிலைகள் திறக்கப்பட்டிருந்தன. | கொள்வனவுக்காக சந்தை போட்டி விலை ஒப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கொள்வனவு துறைமுகத்தின் அவசர பேணுகை நடவடிக்கையாக காணப்பட்டமையால் சந்தை போட்டி விலை ஒப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்டு, கொள்வனவு வழிகாட்டல்களின் படி இது இடம்பெற்றுள்ளது. | கொள்வனவுகளை மேற்கொள்கையில் பின்பற்ற வேண்டிய முறைக்கு அமைய கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 5.3.13 (அ) மற்றும் 5.4.8 (அ) | 2019 யூன் 21 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிட மிருந்து ரூபா 1,366,200 பெறுமதிக்கு ‘‘சயுர’’ படகுக்கு வன்பொருட்களை கொள்வனவு செய்கையில் வழங்குனரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | குறித்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையின் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாகவே செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு வழிகொட்டல் கோவையின் படி கொள்வனவு செய்கையில் வழங்குனரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2/2017 ஆம் இல க்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்றறிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 வாகனங்கள் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது வாகனங்களின் உரிமையாளராக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு காணப்படுவதனால் 2018 யூன் 21 ஆந் திகதியிட்ட கடிதத்தினால் அப்போதைய செயலாளருக்கு கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கையொப்பத்துடன் இந்த சொத்துக்களை இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்குமாறு எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி வாகனங்களின் பதிவு உரித்தினை கூட்டுத்தாபனத்தின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவு | வரிக்குரிய கால எல்லை முடிவடைகின்ற மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் பெறுமதிசேர் வரித் தொகை தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் ரூபா 10,317,782 தொகையான பெறுமதிசேர் வரி 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டதன் படி தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | வரிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி குறித்த கால எல்லையில் வரியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 71,111,073 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,063,863 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 81,174,566 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் தாபன, நிர்வாக மற்றும் பதவியணிக் கிரயம் ரூபா 56,357,457 ஆல் அதிகரித்திருந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவிற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கூட்டுத்தாபனத்தினால் மாதாந்த வாடகையை தீர்மானிக்கையில் அரசாங்க விலை மதிப்பீட்டாளரிடமி ருந்து மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ளாது அம்பலாங் கொடை மீன்பிடித் துறைமுகத்தில் 40 பேர்ச் காணி ரூபா 100,000 மாதாந்த வாடகைக்கு ஐஸ் இயந்திரத் தொழிற்சாலையொன்றை நிர்மாணி த்து பராமரிப்பதற்காகவும் 04 பேர்ச் காணி ரூபா 100,000 மாதாந்த வாடகைக்கு உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனை நிலைய மொன்றை நடாத்திச் செயல்வதற் காகவும் 2014 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்க விலை மதிப்பீட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விலை மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர், வாடகைக் கட்டணத்தை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தி னால் வாடகையை தீர்மானிக்கையில் அரசாங்க விலை மதிப்பீட்டாளரிடமிரு ந்து மதிப்பீட்டு அறி க்கையை பெற்று அதன்படி தீர்மா னித்தல் வேண்டும். |
| (ஆ) தொழில்நுட்ப விவரக் குறிப்பு களின்படி எரிபொருள் குழாய்களின் இயலளவு நிமிடத்திற்கு 150 லிட்டர்களாக இருக்க வேண்டிய போதிலும், எரிபொருள் வழங்கப்ப ட்ட குளாய்களின் இயலளவு நிமிடத்திற்கு 138 லிட்டராக காணப்பட்டதுடன் பொருத்தப்பட்டிரு ந்த எரிபொருள் குளாய்கள் 2019 மார்ச் 11 ஆந் திகதி முதல் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் வழங்குனருக்குச் செலுத்திய ரூபா 3,824,200 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. மேலும், உடன்படிக்கையின்படி பொருட்கள் வழங்கப்படாமை மற்றும் தேவை களை பூர்த்தி செய்யாத எரிபொருள் குளாய்களை வழங்கியிருந்தமை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனத்தினால் கொட்பே, திக்ஓவிட, பேருவளை, காலி, மிரிஸ்ஸ, புராணவெல்ல, குடாவெல்ல, அம்லங்கொட ஆகிய துறைமுகங்களில் 08 குளாய்கள் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி கூட்டுத்தாபனத்தால் குளாய்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனத்திற்கு முற்பணம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ள போதிலும், வேறு எவ்விதத் தொகையும் அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்படவில்லை. அதன்படி, குறித்த குளாய்களின் பெறுமதி முற்பணத் தொகையை விஞ்சியு ள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கொள்வனவுகளை மேற்கொள்கையில் எப்போதும் தொழில் நுட்ப விவரக் குறிப்பு களின்படி அதனை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) 06 மீன்பிடி துறைமுகங்களிற்கு எரிபொருள் தாங்கிகளை வழங்கி நிறுவுவதற்கு ரூபா 11,363,000 செலவில் தனியார் நிறுவன மொன்றுடன் 2017 நவம்பர் 08 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ள ப்பட்டது. எரிபொருள் தாங்கிகளை நிறுவுவதற்கு உடன்பட்டிருந்த | ஆந்த கம்பனியினால் உரியவாறு தாங்கிகள் துறைமுகங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த தாங்கிகளை நிறுவுவதற் கான இடங்களில் வேலைகள் முடிவடையாதிருந்தமை காரண மாகவே இணங்கிய காலத்தைக் காட்டிலும் அதிக காலம் வழங்கப்பட வேண்டிய தேவை | எரிபொருள் தாங்கி களை நிறுவுவதற்கு ஏற்பட்ட தாமதத்திற் கான தாமதக் கட்டணத்தை பொறு ப்புவாய்ந்த தரப்பிட மிருந்து அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தைக் காட்டிலும் 506 நாட்கள் தாமதமாகியிருந்த போதிலும், உடன்படிக்கையின்படி எரிபொருள் தாங்கிகளை நிறுவும் பணி நிறைவடையாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 15 முதல் கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 28 ஆந் திகதி வரையான தாமதக் காலத்திற்குரிய கட்டணமாக ரூபா 11,703,809 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | ஏற்பட்டது. தற்போது 05 துறைமுகங்களில் தாங்கிகளை பொருத்தும் வேலைகள் முடிவடைந்துள்ளன. | |
| (ஈ) | பாணந்துரை துறைமுகத்தில் மணல் அகழ்வுக்காக அங்கீகாரமின்ற 2014 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பாதுகாப்பு பிணைமுறி பெற்றுக் கொள்ளப்ப டாது ரூபா 20,000,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 10 ஆந் தேதியிட்ட குறைநிரப்பு உடன்படிக்கை விதிமுறைகளின்படி, தனியார் கம்பனியால் அகழப்படு கின்ற மணலை விற்பனை செய்யும் வருமானத்தில் இருந்து முற்பணம் கழிக்கப்பட வேண்டுமாயினும், கணக்காய்வுத் தேதி வரை எந்தத் தொகையும் அறவிடப்படாத போதி லும் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 20,000,000 முற்பணத்தில் இருந்து இதுவரை அறவிடப்படா துள்ள ரூபா 16,894,354 தொகையை மீள அறவிடுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கை களை எடுப்பதற்கான கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ள்ளன. | அரசாங்க சட்ட விதிகளை பின்பற் றாது மேற்கொள்ளப் படுகின்ற நட்டங்களி ற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்க ளை இனங்கண்டு நடவடிக்கை எடுப் பது முகாமைத்து வத்தின் பொறுப்பா கும். |
| (உ) | மணல் அகற்றுவதற்குத் தேவையான படகுகள் கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட போதிலும், 20581 சதுர கனஅடி மணலை அகற்றுவதற்கான ஒப்பந்தம் 03 ஆண்டுகளுக்கு ஒரு தனியார் கம்பனிக்கு 2018 ஒக்தோபர் 23 அன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரருடன் உடன் படிக்கை எதுவும் கைச்சாத்திடப்பட்டி ருக்கவில்லை. அவ்வாறு அகற்றப் பட வேண்டிய மொத்த மணல் அளவு 20581 சதுர கன அடிகளான போதிலும், 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை 3426 கனஅடி அல்லது 16 சதவீதமான மணலே அகற்றப்பட்டிருந்ததுடன், 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் | கூட்டுத்தாபனம், குறித்த ஒப்பந்த காரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன், அதன் பிரதியொன்றை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.<br>மணல் அகழ்வு பணியை கையளிக்கும் கடிதத்தின் படி இப்பணி மேற்கொள்ளப்படாமை யால் குறித்த உடன்படிக்கை 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி இடைநிறுத்தப்பட்டது. | துறைமுகத்துக்குள் மீன்பிடி கப்பல்கள் நுழைவதற்கு ஏற்ற விதத்தில் மணல் அள்ளப்பட்டு துறை முக தடாகத்தை பராமரிக்கின்ற கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதி வெளியிடப்பட்ட இலங்கை சர்வதேச சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம். துறைமுகத்துக்குள் மீன்பிடி கப்பல்கள் நுழைவதற்கு ஏற்ற விதத்தில் மணல் அள்ளப்பட்டிருக்காமையால் துறைமுக தடாகத்தை பராமரிக்கின்ற கூட்டுத்தாபனத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | | |
| (ஊ) 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 73 சதவீதத்தை ஈட்டிய மோதர மீன்பிடித் துறைமுகம், 2014 ஒக்தோபர் 30 முதல் 25 ஆண்டுகளிற்கு தனியார் விலை மதிப்பீட்டாளர் ஒருவரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 125,000 மாத வாடகைக்கு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இதனையடுத்து, கூட்டுத்தாபனத்திற்கும் குத்தகை தாரருக்கும் இடையே 2015 யூன் 10 ஆந் திகதி கைச்சாத்திட்டிருந்த மேலதிக உடன்படிக்கையின் 03 ஆம் நிபந்தனையின் அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் மாதாந்த வாடகையான ரூபா 1,700,000 தொகையை அறவிடுவ தற்கு இணங்கியிருந்த போதிலும், அந்த மதிப்பீட்டிற்கு துறைமுகத் தடாகம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>இதன்படி அரசாங்க மதிப்பீட்டாளரின் மாத வாடகையை அறவிட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 106,203,391 தொகை கூட்டுத்தாபனத்திற்கு இழப்பாகியிருந்த போதிலும் அறவிடப்படாத தொகையை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் மேற்படி விடயம் கலந்துரையாடப்பட்டதுடன் குத்தகை உடன்படிக்கையை நிறுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியதுடன் அந்தத் தீர்மானம் குறித்து 2020 செப்தெம்பர் 09 ஆந் திகதி சட்டமா அதிபருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது.<br>சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்கு அனுப் பிவைக்கப்பட்டிருந்த கடிதத்தில் அந்த உடன்படிக்கையை நிறுத் தும் கடிதத்தை சட்டப் பிரிவின் ஊடாக தயாரித்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை குத்தகைக்கு வழங்குகையில் முறையான உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அரசாங்க மதிப்பீட்டின் படி குத்தகை வாடகை அறிவடப்பட வேண்டுமென்பதுடன் நீண்டகாலமாக வாடகை செலுத்தப்படாதுள்ள போது உடன்படிக்கையை இரத்துச் செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முனைதல் வேண்டும். |
| (எ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த முற்செலுத்திய தொகை ரூபா 36,659,355 ஆனதுடன், முறையே 4 மற்றும் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ரூபா ரூபா 614,653 தொகையும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 11,551,997 தொகை யும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 24,492,700 தொகையும் காணப்பட்டதுடன், இதன் மூலம் கூட்டுத்தா | பழைய மீதிகளை கண்டறிந்து அந்த மீதிகளை தீர்ப்பதற்குத் தேவையான நடவபடிக்கைகளை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவிடமிருந்து உரிய ஆவணங்கள் கிடைத்த பின்னர் கணக்குகளில் உரிய நாளேட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்படும். | அரசாங்க சட்ட விதிகளை பின்பற்றாது மேற்கொள்ளப்படுகின்ற நட்டங்களிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பா |

| | | |
|---|---|---|
| பனத்தின் சொத்துக்களை தனியார் துறையினருக்கு சட்டரீதியற்ற விதத்தில் பயன்படுத்தவதற்கு இடமளிக்கப் பட்டிருந்த போதிலும், இதற்குப் பொறுப்புடைய உத்தியோகத்தர் களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | | கும். |
| (ஏ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ''சயுரி'' படகு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஒலுவில் துறைமுகத்தில் அகழ்வு நடவடிக்கைகளிற்காக 2016 திசெம்பர் 16 முதல் 2017 மார்ச் 09 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாததுடன், அதன் காரணமாக துறைமுக அதிகாரசபையிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 24,840,000 தொகையை இதுவரை அறிவிட முடிந்திருக்கவில்லை. | துறைமுக அதிகாரசபையிடமிருந்து குறித்த தொகையை அறிவிடுவதற்கு பல சந்தர்ப்பங்களில் எழுத்துமூல கோரிக்கை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன். | கூட்டுத்தாபனத்தின் படகுகளை ஏனைய நிறுவனங்களிற்கு சேவைக்கு வழங்குகையில் முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் வேண்டும். |
| (ஐ) ரூபா 5,065,075 பெறுமதியான 06 எரிபொருள் தாங்கிகளை வழங்குவதற்காக 2007 ஆம் ஆண்டில் ரூபா 2,791,215 முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த எரிபொருள் தாங்கிகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்காமை தொடர்பாக அதற்குப் பொறுப்புடைய வழங்கல் முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது அந்த முகாமையாளர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு ஓய்வுபெற்றிருந்ததுடன், இடம்பெற்றிருந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் படி ரூபா 1,745,385 தொகையை செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும், 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதி அதில் ரூபா 1,500,000 தொகை அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 245,385 நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பிடமிருந்து அறவிடுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்திய முற்பணத் தொகையை மீள அறவிடுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 1041/DMR ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டதுடன் அந்த வழக்குத் தீர்ப்புக்கு அமைய அந்த நிறுவனத்தால் எமக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா ரூபா 1,745,385 தொகையில் ரூபா 1,500,000 தொகை 2020 செப்தெம்பர் 29 அன்று அறவிடப்பட்டது. அவ்வாறே அந்த நிறுவனத்திடமிருந்து அறவிட முடியாதுள்ள ரூபா 245,385 தொகையை பதிவழிப்பதற்கு 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி பணிப்பாளர் சபைக்கு படிவம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் குறித்த உத்தியோகத்தரே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டுமென பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. குறித்த உத்தியோகத்தர் தற்போது ஓய்வுபெற்றுள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | பொருண்மையான வழங்கல்களிற்கு கேள்விகளை பெறுகையில் வழங்குகின்ற முற்பணங்களிற்காக பிணைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1997 மார்ச் 06 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி மீனவர்களிற்கு மீன்பிடி படகுகளின் திருத்தம் மற்றும் பராமரித்தல் சேவைகளை வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு கூட்டுத் தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்திலுள்ள பிரிவுக ளின் படி நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்ததாபனத்திற்கு பொருந்தாது என திறைசேரியின் பிரதிநிதியால் பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது சுட்டிக் காண்பித்திருந்த போதிலும், திறைசேரியிரி டமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது அந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தால் மிரிஸ்ஸ மற்றும் சிலாபம் மீன்பிடி துறைமுகங்களின் நிர்மாண பணிகளிற்காக ஆலோசனை சேவையினை வழங்கியமை க்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 9,350,000 ஆலோசனைச் சேவை வருமானத்திலிருந்து கூட்டுத்தாபனத்தின் 23 உத்தியோகத்தர்களிற்கு 2019 ஆம் ஆண்டில் மதியுரைச் சேவைக் கட்டணமாக மொத்தம் ரூபா 7,031,121 செலுத்தப்பட் டிருந்தது. மேலும், இந்த ஆலோசனைச் சேவை வழங்குதல் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களிற்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத் தாபனத்தின் ஆலோச னைக் கட்டண கொடுப்ப னவு தொடர்பில் செயற்படு கையில் 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க சுற்றறிக்கையிலு ள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் 2020 யூன் 24 ஆந் திகதி பணிப்பாளர் சபைக்கு விஞ்ஞாபனம் சமர்ப்பிக் கப்பட்டு இந்தக் கொடுப்ப னவுக்காக 2020 யூலை மாதம் அங்கீகாரம் பெறப் பட்டது. இருப்பினும், இந்த சுற்றறிக்கை எமது கூட்டுத்தாபனத்திற்கு பொருந்தாது என பின்னர் கண்டறியப்பட்டமையால் இந்த கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | கூட்டுத்ததாபனத்திற்கு பொருந்தாத சுற்றறிக் கையினை அடிப்படை யாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப் படக் கூடாததுடன் அந்தக் கொடுப்பனவு களை அங்கீகரித்த உத்தியோகத்தர்களிற் கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பத ற்கும் செலுத்திய கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் 09 ஆவது பணிப்புரையின் படி துறைமுகங் களை இலாபத்தில் இயக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் 21 துறைமுகங்களில் 16 துறைமுகங்களிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 221,140,993 ஆகும். | அனைத்துத் துறைமுகங் களையும் கூட்டுத்தாபன த்தின் உயர்மட்ட முகாமைத்துவத்தையும் உள்ளடக்கிய குழுவொ ன்று நியமிக்கப்பட்டதுடன், குறித்த துறைமுக முகா மையாளர்களிடமிருந்து அவர்களது துறைமுகங் களை இலாபத்தில் இயக் குவதற்கு முன்மொழியப் பட்ட ஆலோசனைகளை உள்ளடக்கிய செயற்திட்ட | நீண்டகாலமாக நட்ட த்தில் இயங்குகின்ற துறைமுகங்களை இலாபத்தில் இயக்கு வதற்கு தேவையான உபாய வழிகளை நிச்சயித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிக்கைகள் பெறப்பட்டு அவற்றை நடமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், 2016 முதல் 2020 வரை தொடர்ச்சியாக ஊழியர் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையால் அநேக துறைமுகங்கள் நட்டத்தில் இயக்கப்பட்டன. | |
| (ஈ) கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்குவதை நிறுத்துவதற்கு குழு தீர்மானித்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் கடன் அடிப்படையில் ரூபா 22,868,579 பெறுமதியான எரிபொருள் வழங்கப்பட்டதுடன், மோதரை கடற்றொழில் துறைமுகத்தில் ரூபா 5,675,373 நங்கூரமிடல் கட்டணமும் நிலுவையாக காணப்பட்டது. | மீனவர்களிற்கு கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுவதில்லை என்பதுடன், சகல துறைமுகங்களிலும் எரிபொருள் விற்பனையை கணக்கீடு செய்கையில் கடன் அடிப் படையில் மேற்கொள்ளப்ப ட்டதாகக் கருதி கணக்கீடு செய்யப்படுகின்றது. மோதர மீன்பிடி துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த படகுக்காக அறவிடப் பட வேண்டிய ரூபா 5,675,373 கட்டணத்தை அறவிடுவதற்காக கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அது விவாதிக்கப்பட்டு வருகின்றது. | கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்குவதை நிறுத்துவதற்கும் முறையாக அறவிடுவதற்கும் வழிமுறையொன்றை தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். |
| (உ) புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கு கணக்குகள் குழு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும், 2014 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரித்து அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப் படாததுடன், சுற்றறிக்கைகளிற்கு முரணாக சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டமை தொடர்பிலான தவறை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரித்து அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், 2018 ஏப்ரல் 14 ஆந் திகதி அதற்கு அங்கீகாரம் கிடைத்தது. அதன் பிரதியொன்று இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைகளிற்கு முரணாக சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டமை தொடர்பிலான தவறை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவின் 74 ஆவது கூட்டத்தின் போது II ஆவது உப குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் படி முற்பணமாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 36,659,356 தொகை பல வருடங்களாக அறவிடப்படாதுள்ளதுடன், அது தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 10 வருடங்களிற்கும் மேற் பட்ட பழைய மீதிகளாக இவை காணப்படுவதால் அது தொடர்பில் ஆய்ந்த றிந்து அந்த மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக் கும் பொருட்டு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. | 10 வருடங்களிற்கும் மேற் பட்ட பழைய முற்கொடுப்பனவு மீதிகள் தொடர்பில் அவற்றை நீக்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |